ஸ்ரீ

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

ஸ்ரீமதேராமாநுஜாய நம.

விசுவரூபபசுசம்வாதமென்னும்

# பரப்பிரம விவேகம்.

## அழகியமணவாளதாசர்

என்கிற-திவ்வியகவி

## பிள்ளைப்பெருமாளையங்கார்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது.

உபயவேதாந்தாசாரியராகிய திருமலை

## நல்லான்சக்கிரவர்த்திசுவாமிகள்

திருவடிசம்பந்தரும்

விசிஷ்டாத்துவிதவேதாந்ததரிசன

சம்பிரதாயஸ்தரான

## ஸ்ரீமத்வேதமார்க்கசபையாரில்

ஒருவரும்

அத்திரிருஷிகோத்திரரும் ஆகிய

## கெ. பார்த்தசாரதிராஜா

அவர்களால்

பார்வையிட்டு

கலைமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாப்தம்- ௪௯௬௨

துன்மதி௵- ஆவணி௴

# இந்நூல்அச்சுப் பதித்தலின்வரலாறு.

இச்சென்னையில்-தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்தவர்களாயும்-சைவசமயிகளாயுமுள்ள; சென்னைக்கல்விச்சங்கத்தில்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்தும்இயற்றமிழாசிரியர்-தி-விசாகப்பெருமாளையர்காஞ்சீபுரம்-வித்வான்சபாபதிமுதலியார்புரசை--அசபாபதிமுதலியார்-ஷை-கல்விச்சங்கத்தில் தமிழ்ப்புலவர்-பு-பொன்னம்பலக்கவிராயர்-தில்லையம்பூர்-சந்திரசேகரகவிராசபண்டிதர்-யாழ்ப்பாணம் போலஇச்சென்னையும்மற்றஇடங்களும் கிறிஸ்தவர்மயமாகவொட்டாமல் சுஞ்ஞானசூரியோதயமுதலிய சிறுபுத்தகங்களையச்சிட்டுபகரிக்கும், சென்னைச்சதுர்வேதசித்தாந்த சபாபோஷகர்களாகிய-வைசத-உமாபதிமுதலியார்-சிற்றம்பலமுதலியார்முதலானவர்கள்இதுவரையும் ஸ்ரீவைஷ்ணவசமயத்தின்மேல்யாதொருகுறைவுங்கூறி அச்சிட்டதில்லையாரோஒருவர் அரதத்தாசாரியசுவாமிகள்சுலோகப்படி சிவஞானசுவாமிகள்மொழிபெயர்ப்பு ஆசிரியப்பாவென்றுஒன்றைத்தப்பேடொன்றிலாமலச்சிட்டிருக்கின்றனர் இவர்இவ்வூர்ச்சைவசமயிகளுடையஅபிமானம்பெறும்படிஅதுசெய்தார்போலும் அதுநிற்க இரதத்தாசாரியசுவாமிகளாகிய அழகியமணவாளதாசர் அருளிச்செய்த இந்நூல் அதற்குமாறாக வெளிப்படுத்தலாயிற்று.

## இனிப்பதிப்பிக்கப்படுவன.

சைவவைணவதீபம்.

நீலகண்டசிருங்கபங்கம்.

சிவதத்துவவிவேகதண்டனம்.

சிவார்க்கமணிதீபிகாபிரவாதம்.

ருத்ரதேவதாநிர்ணயம்.

பாஷண்டமததப்தம்.

பரப்பிரமநிரூபணசாரசங்கிரகம்.

ஹரி: ஓம்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# பரப்பிரமவிவேகம்.

## நூன்முகம்.

நித்திய விபூதியாகிய பேரின்பத்தில் நித்யமுக்தர் சேவிக்கும்படி வீற்றிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் ஆதிபரஞ்சோதி யுருவை அங்குவைத்து லீலாவிபூதியிலுள்ள சேதநாசேதனர்களுஜ்ஜீவிக்க அர்ச்சாவதாரமாயெழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்களிற் சிறப்புற்றோங்கிய திருவரங்கம் பெரியகோயிலில் உலகத்திலுள்ள சேதனர்களைத் திருத்தி ஸ்ரீமத்வேதமார்க்க தரிசனத்தில் செலுத்தியருள ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதாரங் கண்டருளி பரபாஹ்ய மூகல்ய மார்க்கங்களைத் திரஸ்கரித்து ஸ்ரீவிசிஷ்டாத்துவித வேதாந்த தரிசனத்தை நிலைநாட்டிப் பராங்குசரால் கொடுக்கப்பட்ட பரசமயக் கோளரி யென்னுந் திருநாமம் பெற்று எழுந்தருளியிருந்த ஸ்ரீஉடையவருடைய திருவடிச்சம்பந்தியாய்ப் பிரபன்னகாயத்திரியைத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீபாதமுதலியவிசதிலசராயித் திருவரங்கத்தமுதனார் திருப்பேரனாராகிய அழகியமணவாளதாசர் என்கின்ற திவ்யகவிப் பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள் நம்பெருமான் முதலிய திவ்யதேசப் பெருமாள்களின்மீது தமிழ்ப்பிரபந்தங்கள் பலசெய்தருளுங்காலத்தில் தமிழிலக்கணவிலக்கியங்களைக் கற்றுவல்ல சிறந்த புலவர்கள் பலரும் இவருடைய கவிகளில் சொற்சுவை பொருட்சுவை முதலியவைகளைக் கண்டு கேட்டுங் கொண்டாடுவதை ஆனைக்காவிலிருக்கும் ஆசமவாதிகள் கேள்விப்பட்டு இப்படிப்பட்ட வித்துவானால் நம்முடைய சம்புகேசுரச் சிவபெருமான் மீது ஒரு பிரபந்தம் பாடுவித்துக் கொள்ளவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் ஒருநாள் இவருடைய திருமாளிகையில் வந்து தங்கள் கருத்தை வெளியிட அது கேட்டருளிப்

திரிகரணத்தாலும் தேவதாந்தரத்தைப்பற்றவிட்ட சுத்தசத்துவ தொண்டக்குலஸ்ரீவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்காரவர்கள் புன்னகைகொண்டு யாம் அரங்கனைப்பாடினவாயினால் மற்றொருவராங், கனைப் பாடுகிறதில்லையேயெனத் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு (குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்ளுமவனைப்போல; நம்முடைய பரமசிவத்தின்மீது பாடல்பெற்றுக்கொள்ளாதது குறைக்குறைவென்றும் சொல்லைப் பெற்றுக்கொண்டோமேயென்று மனம்பொறாதவரேயாய்ச் சடக்கெனவெழுந்திருந்து அவ்வகையினாலாவது உம்முடையவாக்கினால் எங்கள்பரமசிவத்தின்மீது ஒருபாடலாவது பெற்றுக்கொள்ளுகிறோமென்றுசபதங்கூறித் தங்களிருப்பிடத்துக்குப்போய் அதற்குவகைதேடிக்கொண்டிருந்தனர்கள்.

இப்படியிருக்கச்செய்தே கோயிலில் உதயத்தில் திருக்காப்பு நீக்கி நம்பெருமாளுக்குச் செய்யுங் கைங்கரியமாகிய விசுவரூபதரிசனஞ் செய்விக்கப்போகிற சமயத்தில்கொண்டுபோய் அர்ச்சகர் சமர்ப்பிக்கிற பொருள்களில் ஒன்றாகிய கபிலையென்கிற பசுவானது * ஒருநாள் ஆனைக்காவைச்சார்ந்த ஒருபுலத்தில்மேய அதைமேற்கூறிய ஆகமவாதிகள்பிடித்து இதனால்தாங்கள்கொண்ட கருத்தையீடேற்றுவித்துக்கொள்ளலாமென நினைத்துக் கட்டிவைத்தனர்கள். அன்றாத்திரிகோயில் அர்ச்சகர்முதலாயினோர் விசுவரூபதரிசனப்பசுவைக்காணாமல் தேடிக்கொண்டுபோகையில் ஆனைக்காவிலிருக்கக்கண்டு ஆகமவாதியர்களைப்பசுவைக்கொடுக்கும்படிக்கேட்க அவர்கள் உங்களுடையபிள்ளைப்பெருமாளையங்காரவர்கள்வந்துகேட்டால் தருவோமென்றுசொல்லஅதுகேட்டு விசுவரூபதரிசனத்துக்குப் பிராதக்காலத்திலவேண்டுமேயென்று மெண்ணினோர் அதைமறு

---

* விஸ்வரூபதரிசனப் பொருள்களில் கபிலையும்
ஒன்றென்பதற்குப் பிரமாணம்,
திருப்பள்ளியெழுச்சியில் - எட்டாவதுபாசுரம்.

வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க............*
மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா............*
எம்பெருமான்படிமக்கலங்காண்டற்கு............*
ஏற்பனவாயினகொண்டுநன்முனிவர்............*
தும்புருநாரதர்புகுந்தனரிவரோ............*
தோன்றினனிரவியுந்துலங்கொளிபரப்பி............*
அம்பரத்தலத்துநின்றகல்கின்றதிருள்போய்............*
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே............*

த்து ஒன்றும் பேசாமல் ஒத்துக்கொண்டு பரபரப்புடன்சென்று
ஐயங்காரவர்களிடத்தில்விண்ணப்பஞ்செய்ய "மறந்தும்புறந்தொழா
மாந்தர்" என்கிறபடியே அந்தப்பிரபன்ன நிஷ்டையுடையராகிய
வைதிக வைஷ்ணவராயவர் அதைக்கேட்டருளித் தாங்கள் கைலாசநாத
ரமற்றைக்காலத்தில் ருத்திரபூமியிலடிவைப்பதுகூடமாட்டோமெனி
யும் அவ்வாலயத்தில் பிரவேசிப்பது வைதிகவைஷ்ணவர்களுக்குத்
தக்கதன்று ஆனை துரத்தி வந்தாலும் ஆனைக்காவில நுழையலாகா
தென்கிற பழமொழியை நீயறியுங் கேட்டிலையோ ஆதலால்
அந்த ஆசிவ வாதியர்களைக் கோயிலிடத்தில் அழைத்துவாரும்
கோவெனச் சொல்லினர் அவ்வாறே அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும்
ஆனைக்காவில் சென்று அவர்களுக்குச் சொல்ல யவ்வகையாலாயினும்
ஐயங்காரவர்களால் ஒருபாடல் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துக்
கொண்டிருந்த அவர்களும் நம்முடைய எண்ணம் நிறைவேறுங்
காலமிதுதானென்று அதற்கொத்துக்கொண்டு அங்கு சந்தோஷித்
தோடு அத்தலையையும் ஒட்டிக்கொண்டு ஐயங்கார் எழுந்தரு
ளியிருக்கும் சந்தனு மகாராஜ மண்டபத்தில வந்து சேர்ந்தனர்கள்
ஐயங்காரவர்களும் அவ்விடத்திலெழுந்தருளிக் கபிலையை விடுத்து
நீர் உங்களுடையகருத்தென்னவென்றுகேட்டருளவே அவர்கள் உம்மு
டையவாக்சாதுர்யத்தாற் சிவபெருமானாகிய எங்கள் தெய்வத்தி
ன்மீது ஒருபாடல்பாடித்தருவீரேல் விசுவரூப தரிசனப்பசுவைநா
ங்கள் விடுவதற்கு யாதொரு தடங்கலுமில்லையென்று சொல்லினர்.
(பொய்ம்மையும் வாய்மை யிடத்தபுரைதீர்ந்த நன்மைபயக்கு
மெனின்) என்கிற குறளின்படி அவர்கள் சொன்னதற்கு இணங்க
[illegible] நடித்து நம்பெருமானுக்கு விசுவரூபதரிசனத்
துக்கு மற்றுநாள் பிராதக்காலத்தில் ஆடவேண்டியபடியால் அப்
பசுவை விடுவீர்களாகில் உடனே யாம் பாடுகிறோமென எங்கள்
சிவபெருமான் விஷயமாக நீர்பாடுவது யதார்த்தமாகில் அப்பாட்
டின் ஒரு சொல்லை முன்னே சொல்லுவீராகில் பசுவை
விடுகிறோமென்று சொல்ல ஐயங்காரவர்களும் புன்னகைகொண்டு
அம்பரத்த மங்கைபாகன்) என்று முதலிரண்டுசீரை அருளிச்செய்த
மாத்திரத்தில் அப்பசுவை விட்டனர்கள் உடனே ஐயங்காரவர்க
ளும் முன்றாம்சொன்ன சீரைத்தொடங்கி,

(பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

மங்கைபாகன்சடையில்வைத்தகங்கையார்பதத்துநீர்*
வனசமேவுபிரமனுக்குமைந்தனானதில்லையோ... ...*
செங்கையாலிரந்தவன்கபாலமாறகற்றினார் ... ... ...*
செய்யதாளின்மலரடிக்கிரத்திலாவதில்லையோ... ...*,

செங்கண்வேழமுமெனவந்த நுங்கள்தேவனே...*
வீறுவாணனமரிலன்றுவிறலழிந்ததில்லையோ... ...*
அங்கணன்றாலழிந்தபோது வெள்ளிவெற்பகன்றதோ
ஆதலானரங்கனன்றிவேறுதெய்வமில்லையே........*

ஆதலால் ஜீவகோடியில் சார்ந்தவரேயொழிய உங்கள்தேவதைபரமாத்துமா அல்லவென்றுஇச்செய்யுளைச்சொல்லி உலகத்துக்குப்பல்தெய்வங்களுண்டோ ஒருதெய்வமேயாம் அத்தெய்வந்திருவரங்கனேயல்லாமல்வேறில்லையென அதுகேட்டுஆகமவாதியர்கள் (கிணறுவெட்டப்பூதம்புறப்பட்டாப்போல்) இதென்னவிபரீதமாய் முடிந்ததேயென்றுநினைந்துகொண்டு அந்தஆகமவாதிகளுக்குள் சிறந்தநிஷ்டானுபவர்களாகிய சிலவித்துவான்கள் வேதவிருத்தமாகிய ஆகமபுராணங்களைக்கொண்டு புலவர்பெருமானாகிய ஐயங்காரவர்களோடுவாது செய்யத்தொடங்கினார்கள்,

அவ்வாதிசைவவித்துவான்கள்கேட்டவினவுக்குவிடைசொல்லியருளிய உத்திரங்களைப்பின்னுள்ளோருந்தெரிந்துகொள்ளும்படிப்பரமகாருணிகராகிய ஐயங்காரவர்கள்வெள்ளைப்பாவாற்கூறினர்.

எங்கள்சிவபெருமான் அக்கினிமலையாய் நின்றருளியபோது அவருடைய பாதத்தைத் திருமால் தேடினானென்றதற்குவிடை.

(நேரிசைவெண்பா)

அண்டமனைத்தவடிக்கீ ழொடுங்கியுல...............*
குண்டபெருந்துதரத்துள்ளொடுங்கித்-தண்டமதி *
சூடினன்மாலருளாற்றோன்றினனங்கவனைத்.........*
தேடினன்மாலென்பதென்.........................(க)

லோகேசுவராகிய பரமசிவனார் திரிபுர தகனஞ்செய்தது அச்சுதன்முதலிய தேவர்களைக்காத்தருளினனென்றும் அந்தஅச்சுதனேயவர் விருஷபமாய் அப்பரமசிவத்தைத் தாங்கினனென்றும் சொன்னதற்குவிடை.

ஆவாயதன்கன்றுபந்தரியாயிப்பொருளாய்......*
ஏவாப்பயந்தனுமாமெம்பெருமான்-காவாக்கால்...*
போரும்பொருமோபுராந்தகனென்றபேரும் ...*
சீரும்பெறுமோசிவன்............................(உ)

அந்தவரனையனுமாருகப்பிறந்து....................*
சுந்தரமும்வாகனமாய்த்தாங்கியதை-யிந்தவுல ......*

எல்லாமறியமாலேறு என்பதென்றோ ..........*
கல்லாமடமாந்தர்காள் ..................(௩)

பக்தவற்சலராகிய திருமால் சிவனைக்காத்தருளினானென்பதற்கு மேலும் ஒரெடுத்துக்காட்டிவிடை.

தாளாற்றித்தலைசிதறிச்சுட்டவிடப்புன்முளைத்து .......*
வாளாப்பெயருமறையாதோ-தாள்வருந்த ... .......*
வந்தசிவனுக்கிரங்கிமாயவிருகாளரனை .............. ...*
அந்தவரியல்லாவிட்டால்.........................(௪)

ஸ்ரீகபிலர்சடதியைஸ்ரீபரந்தாமனானவர்தம்முடையகண்ணைச்சாத்திச்சக்கரத்தைப்பெற்றாரென்றுநூல்கள்கூறுகின்றனவென்றதற்கு

சக்கரத்தைமிக்கமலர்சாத்தியுபாசித்ததனால் ... ...* [விடை
முக்கவட்டுச்சூல்முன்னம்பெற்றான்-தக்கமனென்று... *
மாமறைநூல்சொல்லவரன்மாற்கீந்தானெனவெல்லா
தர்மதூறுபொய்யறியாதார்...................... (௫)

இன்றுமுத்திரைதரித்துத்தெக்கணமூர்த்தியென .......*
இன்னமரன்றியானித்திருக்க-மன்னையரி... ... ....*
போதோர்கண்ணலரனைப்பூசித்தானென்றுரைப்ப ...*
தேதோசிவப்பிரந்தமோ..... .......... ... ......(௬)

சிவனார்விஷபானஞ்செய்துதிருமால்முதலியதேவர்களைக் காத்தாரென்றதற்குவிடை.

அண்டமுண்டபோதுகடலாலமுமாலத்தையுண்ட ...*
கண்டனையுங்கூடவுண்டகாரணனை-மண்டிநஞ்சுக் ...*
கஞ்சினதாகப்பகரிலீராகமத்தைநம்பிநம்பி........*
வஞ்சநரகிலவிழுவீர்மாண்டு........ ..............(௭)

மங்கமடந்தைதன்கழுத்தின்மங்கலநாணேதோ ... ... *
அலைகடைந்தநாளுதித்தவாலம்-சலைகடந்த... ... ...*
நக்கனும்பாத்திரத்தாற்நாரணனருள்ளமேகத்.........*
தக்கனைத்துன்னுவிழனுவா.........................(௮)

சதாசிவனானவர் சரபமாய்வந்து நரசிங்க மூர்த்தியைப் பொருதவென்றாரென்றதற்கு விடை

புக்ககருடனேபோர்புன்மசகம்வென்றதிறந்......... *
ஒக்குங்கனகனுரங்கிண்ட-மிக்கதிறல்........ ... ... ...*,

தாரிவைப் பொன்னனுக்காயஞ்சிக்கிடநச்சிவன் ... *
மெய்ன்விளைத்தானென்னுங்குறு..................... ...(௯)

பொன்னனாரங்கிண்டதனூற் பொங்குசினமாறிற்றே *
நின்றேசிவசாபந்தீர்சாரவுயிர்-அன்னதனைப்........*
பத்திவகிர்ந்தபின்னர்ப்பாழிநரமடங்கல்...... ......*
உத்தமனைந்தணிந்ததாங்கு.................. ... ...(௰)

சுகீர்சனூழ்வானால் சிவன்தலை யிழந்தானென்று மேனுமோரிதே தேத்துக்காட்டு-விடை.

இந்திரன்செய்வேள்விக்கிடரிழைக்கவெண்ணுமான் *
இந்தப்புரத்துவிழவீழிபிறைல-மூந்தரிந்த... ......*
அந்தகனையமர்ந்தவாழுமைப்பிகையாள் வேண்டிடவும்*
அந்திவன்பெற்றனுபிரயன்று...... ...... ...(௰௧)

காசியிலெழுந்தருளியிருக்கும்மகேசுவரனார்அந்தத்தலத்தில்மரிக்கின்றவர்களுக்குமுத்தியைக்கொடுக்கின்றாரென்றதற்குவிடை.

கேட்டிமதியீர் கொல்கிளர்சனை யோன்வண்காசி... ...*
நாட்டுறப்போர்தம்முயிரை நற்கதியிற்-கூட்டல் ... *
தபரதனுமாரன் தனிப்பெயரான்மேனோர்க்கு ... ... ... *
வபுநறப்போதித்தன்றேவாய்த்து ... ... .. ...(௰௨)

சிவஞானமகேசுவர னென்றதற்கு விடை.

செய்கைகள்செய்து சிவனுயிரானேநீர்.................*
எப்படிசேச்சுரனென்றேதல்- வைதசிறு.......... ...*
பாம்கள்ளிதன்னைப்புவியின்மகாவிருக்கம்.............*
என்கைகொக்குமொக்குமேபீர்ரே.......... ......(௰௩)

சிவங்கள்செய்துசிவனுயிருவென்பதீர்கூறுதல்எவ்வாறென்றதற்கு [விடை

ஓநசத்திலாநவினிலைருகத்திற்புருவிலும் ... ...*
போருகத்தன்பாற்பிறந்தபோழ்-தனில்-கார்நிறத்த *
கண்டத்தான்சோதனைச்செய்காரணத்தால்ருத்திரனென்
றெண்டவைநூல்களுரைக்கும்............. ........(௰௪)

ஸ்ரீகண்டத்தானென்றே வேதமுதல்வ னென்றதற்குறவிடை.

ஞானமறைபைநவின்றனாக்குப்போதெல்லாம் ... *
ஆனமுறைபாலியத்தந்தும்- உணமறை... .........*
அந்தணர்களென்போரரியாமனுந்தொல்லத்] ...*
தந்தனைத்தல்கட்டிவிரோதான்.......... ... ...(௰௫)

சைவர்கள் ஆராதிக்குந் தெய்வம் யோனியும் இலிங்கமுமென்று கூற அதுபொருந்தவர்களாய்த் திருமாலை நீக்கப்பட்ட பொருளாகக்கொண்டு ஆலயங்களிற் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள் லிங்கமூர்த்தியை யோனிரூபமாய்த் தாங்கியிருப்பவர் திருமாலென்றுஞ் சொல்லு சொன்னதற்கு விடை,

பிருகுகோதமன்றன்பெருஞ்சினங்கொள்டிண்டம் *
பருத்துழையிசஞ்சுதிகள்பாரில்-அருகில்ழு ... ... *
இட்டசாபத்தினாலிற்றகுறியன்றோ அம் ... ... *
இட்டதெய்வம் இருத்தலீற்கு ... ... ... (௰௬)

ஸ்ரீசக்கிரவர்த்தினை வாய்மதங்கொண்டு பேசுமவர்கள் அடையும் பயன் இன்னதென்று குறிப்பித்துக் கூறும் பெருமையார் விடை.

சைவிருக்கக்கரவிருக்கக்கண்ணிருக்கநக்கருக்கு ... *
மெய்யிருக்கவெம்பாவிரும்பார்த-வைகுவிழும் ... *
ஆண்குறியைப்பூசித்தழிவதெல்லவர்யாயவனே ... *
வீண்குறியாப்பகுப்வினே ... ... ... (௰௭)

அவ்வாறாறு சிவனையாராதித்துப்பூதி உருத்திராக்ஷம் இலிங்கம் இவற்றைச்சிலபிராமணஜனங்கள் தரிக்கின்றார்களென்றதற்கு விடை.

வேதியர்களாய்ப்பிறந்தும் மெய்யிலிலிங்கம்பொருந்தி
பூதியரக்கண்மணியின் பூணணிந்த-பாதகரை ... [துப்
தீயசன்றனிலத்தின் புறம்விடுத்த ... ... *
ஓதிவேறுநூல்களொருங்கு ... ... (௰௮)

திருமாலுக்கு ஆராதித்த நிவேதனங்களை யார்கொண்டாலும் தோஷமில்லை சிவபெருமானுடைய நிர்மாலியத்தைப் பிராமணர்களும் கொள்ளக்கூடாதென்பது அந்நிர்மாலியப் பரிசுத்தத்தின் ஏற்றத்தைக் கண்டன்றோ வென்றதற்கு விடை.

சத்திரபாசுரர்கள்வீற்றக்கம்பிருகாற்கு ... *
வைத்தகொடுஞ்சாபத்தால் மாமறையோர்-இத்தலத்திற்
சங்கரனிர்மாலியமுந் தானுகந்தபானகமும் ... ... *
தங்கிடாரியாதிந்து ... ... (௰௯)

ஈசுவரனுக்குப்பிதா சொல்லுவீரா ... உலகத்திலே பிரசங்கிக்கப்பட்டிருக்கிற ... ஆகமங்களை ... திருவாய்மலர்ந்தருளின பரமசிவக் கடவுளன்றோ அப்படியிருக்கப் பிராமணரென்றே வென்றதற்கு விடை;

மோகமாநாற்பல்சமயமுன்னியற்றுந்தீயவினை ... ...*
போகநறுநாவலின்கீழ்ப்போந்துமையாள்-பாகனன்னீ
பம்புசிரங்கற்பணிந்துதகுஞ்செய்தகன்றோ..... [ர்
சம்புகேச்சுரப்பேர்த்தலம்... ......................(௨௰)

சிவபெருமானைக் குறித்து அநேகர்தவஞ்செய்துவரங்களைப்பெ
ற்றனரென்றதற்குவிடை,

பொன்னிலங்குமெய்யன்பொருவலிசேர்வாலிபொரு*
தென்னிலங்கைக்கோமான்றிறல்வாணன்-முன்னரனைத்
தாழ்ந்துபெறுவரத்தைச்சாற்றிடலும்வேண்டுமோ *
வாழ்ந்துவிழுந்திட்டனரோவாய்ந்து .. ... ......(௨௧)

திருமாலேபரமனென்னக் கங்கைக்கரையில் வேதவியாசமுனிவர்
பொய்சொன்னபடியால்கைதம்பித்த தென்றதற்குவிடை,

யாருமறியவெகுவேதாரணமெய்...... ...........*
ஆருமொழியாளனெனவாய்த்துரைக்க-வோர்வின்றி *
மேதவியாசன்பொய்விளம்பக்கரந்தம்பித்... ... ...*
தேதமுறுநின்றதென்பதென்............ ......(௨௨)

முனிவர்மொழியார்மூதுபராசரன்செம்...... ... ... ...*
பனிமலராளுள்ளிட்டபல்லோர்-இனிதாய்த்... ......*
திருமால்பரனென்னச்செப்பினான்றேர்க்கேல்... *
பெருநாத்தம்பிக்காத பெட்பு,.................(௨௩)

கேசவனேபரனென்றவேதவியாசர் மேற்சினங்கொண்டெழுந்
தநந்திகேசுரர்வரலாறுகூறியவிடை.

ஓதுமுனிமால்பரனென்றோதமாழ்கிச்சினந்து... ...*
மோதுநந்திமாமுகத்திற் பொன்னடியால்-வாதுசேர்*
மூன்றுநாத்தானந்தமுறைமையாற்கங்கைபெருத் *
தின்முகத்தன்றேன்பிறங்கலீங்கு...... .........(௨௪)

○ மாருதிசீர்பாதமுகம்வாய்க்கட்பெறுநந்தி..........*
சீருகவுமால்பரனுச்சிந்தைசெய்யுங் - காரணத்தால்...*
பேர்கவுமாட்டைப்பெருமாள்மாடென்னவுல....*
கோருனைப்பார்சாரணர்ந்து....... ..........(௨௫)

---

○ அநுமானுடையதிருவடிஸ்பரிசத்தால்நந்திகேசுரனுக்குரன முண்டாகி சோழதேசஞ்சென்று அச்சுதனைநோக்கித்தவஞ் செய்து பேறுபெற்றகாரணத்தால் அந்ததிவ்யதேசத்துக்குத்திருநந்திபுர விண்ணகரமெனப்பெயர்வழக்கிவருகின்றது,

திருமால் உலகத்தில் அநேக அவதாரங்கள் செய்தமையால் அவர் நம்மைப்போலப்பலபிறப்புடையவரன்றோவென்றதற்குவிடை,

பிறப்பிலியாய்த்தானிருந்து பேருலகின்மாயோன்...*
உறப்பிறக்குமென்றுமறையோர்-மறுத்துநீர்... .. *
அச்சுதனேசாதமுடையானென்றறிவிழந்த...... ...*
பிச்சரிற்பிதற்றுவதென்பேச்சு..................(உ௬)

அவ்வவதாரம் இதுகருதியென்னும் விடை,

ஆயவறத்தையறவோரையாக்கவுந்தெவற்... ....... ... *
தீயர்தமைப்போக்கவுமேதிண்புவியில்-மாயுகங்கள் *
தோறுமுற்பவிப்பனெனத்தொகைகீதையிற்கண்ணன் *
கூறுமொழிகேட்டிலிரோகூர்ந்து.......... .......(உ௭)

பிரமன்சிவன்முதலானோர் இறைவனாகிய திருமாலைப்போல அவதரிக்கநிமித்தமில்லையென்னும்விடை.

உடையானுக்கன்றியுடைப்பொருளைக்காக்கப் ... ...*
படையோர்தமக்குண்டோபாரம்-அடைவாகச்.........*
சீரானோர்காக்கத்திருவவதாரஞ்செய்வர்..............*
சேனருக்கேனச்செயல்..........................(உ௮)

சிவனுக்குப்பிறப்பில்லையெனமயங்கிக்கூறியதற்குவிடை,

விச்சுவவரன்சுதனு மேலோன் சமதக்கி............ *
அச்சுவத்தாமன்னனுமானவ்வுருவன்-மெச்சுபுகழ் *
பெருங்குருநாவாசன் பொலிவசை கிடவியனோர்... ... *
சங்கரன்பிறப்பன்றோ தாம்........................(உ௯)

சிவனுடைய பிறப்புகள் இந்திரன்முதலானோர்செய்த பிறப்புக்களைப்போலச் சிறந்தன அல்லவென்னும்விடை,

அக்கியமன்வாயுவாகண்டலன்முதலோர்...... ... ...*
இங்குதித்ததோற்றங்கள்யாவையுமே-பொங்குதிவின் *
மிக்கவர்நன்மானவிளம்பினரோவில்லைபலம்...... ...*
தொக்குமான்பிறப்புக்கும்.......................(௩௰)

இந்நூற்செய்யுட்கள் இன்னும்பல உண்டென்றுகேள்விஅச்செய்யுள்களை யாரேனும்கொடுப்பாராகில் பரமோபகாரமாகக் கொள்ளப்படும்.

ஆகிசைவசமயநிஷ்டராநுபவர்களாகியவித்துவான்கள்சோதித்துக்கொண்டு வந்தபிரசனைகளுக்கு வடமொழியினுந் தென்மொழியினுந் தெய்வப்புலமையுள்ள வீரவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்காரவர்கள் அருளிச்செய்தவிடைகளைப் பார்த்துச்சொல்ல ஒன்றுந்தோன்றாமல் ஓமென்றுதங்கள்தங்கள் இருப்பிடத்துக்குச்சென்றனர்கள்.

---

## ஐயங்காரவர்கள் அருளிச்செய்ததனிப்பாட்டுகள்,

### தாழிசை,

செங்கண்மால்கழன்மஞ்சனம்விழுந்தொட்டிசங்கரன்றலைகளே *
சீர்கொள்கண்ணனல்லடிநீர்மாலிபக்குப்பைசப்புவின்றலைகளே *
எங்கண்மாயவன்பாயலாக்கியதாக்குமாபதிசெவிகளே ... ... ... *
ஏந்தெழிற்புருடோத்தமன்றுதியெழுதுமேடராக்களே ... ... *
பொங்குசீதரனெச்சிலார்படிக்கப்புராரிபின்கண்டமே ... ...... *
புகலிராமனைகடிகொள்பாதுகையகலுமுக்கணன்சரமதே ... ... *
திங்கள்சூழ்சித்திரகூடமேவியவெங்கள்கோவிந்தராசற்குத் ... *
திணமும்மகூத்தாடியானவன்றிருச்சிற்றம்பலவாணனே ... ...(௧)

### கட்டளைக்கலித்துறை.

காமேனந்தாமனைவாவியுளானைகராவினையர்ந் ... ... *
தாமேந்திமூலமென்றோதியநாட்சென்றுதவுகையால்,
மேமேந்துசோலையரங்கனல்லாற்சிறப்பிலையென்றே
மாமேனந்துஞ்சையன்மழுவேந்திஞணிந்தமாநிலத்தே *

மத்தக்கரியைக்கராப்பற்றிநின்றதொர்வாவியுள்ளே ... *
சித்தந்தெளிந்துமுறையிடும்போது செழுந்துளவக் *
கொத்துக்கிளர்முடிக்கோவிந்தவென்றதுகூப்பிட்டதோ
செத்துக்கிடந்தனவோ கெடுவீருங்கள்தெய்வங்களே *

(திருத்தேர்விஷயமாயருளிச்செய்த- நேரிசைவெண்பா.)

ஒன்றுமறியாத ஆமைகாடென்னரங்கர் ... ... ...... *
இன்றுதிருத்தேரிலேறினார் - நின்று ................... *
வடம்பிடிக்கவாருங்கோள் வைகுந்தநாட்டில் ........ *
இடம்பிடிக்கவேண்டுமென்றக்கால் ...... ........... *

அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.